# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 13 | 27-03-2003 | வியாழக்கிழமை | ஓசை 37



நகை உலகில் தங்க நகைகளுக்கு தனித்துவம் பெற்ற நிறுவனம்


கணேசா நகையகம்

(சி-7653)

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா




குடாரப்பு தரையிறக்க நினைவுக்கல்லை கேணல் பால்ராஜ் திரைநீக்கம் செய்து வைக்கிறார்.




# ஆனையிறவுப் பெருந்தள வெற்றிக்கு வித்திட்ட குடாரப்பு தரையிறக்க நினைவுக்கல் திறப்புவிழா

## தளபதிகள், போராளிகள், மக்கள் பெருமளவில் பங்கேற்பு

(வடமராட்சி கிழக்கு)

**ஆனையிறவுப் பெருந்தள வெற்றிக்கு வித்திட்ட குடாரப்பு தரையிறக்கத்தின் 3ஆம் ஆண்டு வெற்றிவிழா தரையிறங்கிய அதேயிடத்தில் நேற்று எழுச்சிகரமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் குடாரப்பு தரையிறக்க நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. நினைவுக்கல்லை தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.**

நேற்று மாலை 3.00 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வில் பொதுச்சுடரை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்தார்.

அதனையடுத்து நினைவுக்கல்லினை கேணல் பால்ராஜ் அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத தரையிறக்க நிகழ்வு

## வெற்றிவிழாவில் தளபதி கேணல் பால்ராஜ்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத ஒரு நிகழ்வுதான் இத்தாவில் தரையிறக்கத் தாக்குதலாகும். பல ஆயிரம் இராணுவத்தினரை கொன்று குவித்த இந்தச்சமர் சிறிலங்கா அரசின் படைத்துறைத் தளபதிகள் உட்பட அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது. இவ்வாறு தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் குடாரப்பு தரையிறக்க வெற்றிவிழா நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சிங்கள அரசு எமது மண்ணை ஜசிக்குறு போன்ற பல நடவடிக்கைகளை கட்டவிழ்த்து ஆக்கிரமிக்க முயற்சித்தது. ஆனால் அதில் அரசு பெரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இன்று தமிழீழப் பெண்கள் மாநாடு

தமிழீழ பெண்கள் தேசிய மாநாடு இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாடு மூன்று நாட்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனக்குழு யாழ். சென்றது

முல்லைத்தீவு கடற்பகுதியில் மீன்பிடிப்படகு மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தைச்சேர்ந்த 03 அதிகாரிகள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். இவர்கள் புலிகள் உட்பட மற்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா பூந்தோட்டம் பகுதியில் மக்கள் மீது படையினர் சோதனை

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அப்பகுதியால் சென்ற பொதுமக்களை மறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சிறிலங்கா இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணியினரே இவ்வாறு மக்களை மறித்து அடையாள அட்டை போன்ற வற்றைபெற்று அவர்களை விசாரித்துள்ளனர். இதற்கு ஆட்சேபம் தெரிவித்து வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

# நெல் விலைக் குறைவிற்கு எதிராக மன்னாரில் நேற்றுப் போராட்டம்

நெல்லின் விலைக் குறைவிற்கு எதிராக மன்னார் அரசாங்க அதிபர் செயலகம் முன் நேற்று மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 1500க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மன்னாரில் நெல்லின் விலைக்குறைவை எதிர்த்து அரச செயலகம் முன் ஆர்ப்பாட்ட மறியல் போராட்டமும், நடத்தியதுடன் சிறிலங்கா இராணுவத்தின் தங்கியுள்ள வயல்கள், பொதுமக்களின் கட்டங்களில் இருந்து முன் கூறிய அட்டவணையின்படி விலக வேண்டும் என்றும் கோஷமிட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் வவுணதீவில் இன்று சந்திப்பு

புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு வவுணதீவு சூனியப்பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஏற்பாடுகளை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. புலிகளின் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ், மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் வீடமைப்பு பிரதியமைச்சர் தலைமையிலான முஸ்லிம் தரப்பினரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.


# குடாரப்பு தரையிறக்க வெற்றி விழா...



பொதுச்சுடரை கேணல் துர்க்கா அவர்கள் ஏற்றுகிறார்.



தமிழீழத் தேசியக் கொடியை கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைக்கிறார்.



மாவீரரின் திருவுருவப்படத்திற்கு பொன் தியாகம் அவர்கள் மலர் மாலை அணிவிக்கிறார்





நிகழ்வில் கலந்து கொண்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்களில் ஒரு பகுதியினர்.


## ஈழ விளம்பரம்

### தவறிவிட்டது

க. இரத்தினராசா (2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு) என்பவருடைய கையடக்கத் தொலைபேசி பளைக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3046)


## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

வளர்மதி எனும் பெயருடைய எக்ஸ்ரே படம் இரண்டு தருமபுரம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(அ)


## ஓராண்டுத் திவச நிகழ்வு அழைப்பு
## இரத்தினம் பாய்க்கியம்

திருப்பூர் மயிலிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினம் பாய்க்கியம் அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச நிகழ்வும் மதிய போசன நிகழ்வும் இன்று 27-03-2003 வியாழக்கிழமை தற்காலிக முகவரியான S. பத்மநாதன், இல.63, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள், சகபணியாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்
(ராசா, பாபு, தனம், குணம்)

(3047)



## பணிநிலை வெற்றிடங்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகையின் கீழுள்ள ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவையாகவுள்ளனர். தகைமையுடையவர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகைதரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம்: நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி.

காலம் : 12.04.2003 மு.ப 10.00 மணி

பணிநிலை - 1 : ஆய அலுவலர் (ஆண்கள்)

பணிநிலை - 2 : ஆய உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள்: பணிநிலை 1இற்கு க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை 2 இற்கு க.பொ.த (சா/த) கற்றிருத்தல் வேண்டும்.

ஆயப்பகுதி,
நிதித்துறை.
த.வி.பு.

(3045)



## பணி நிலை வேண்டுகை

**கீழ்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01. திட்ட இணைப்பாளர்.

01. க.பொ.த சாதாரண தர,க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.
02. திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பணிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் மேற்கொண்ட அனுபவம்.
03. 30 - 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
04. ஆங்கிலமொழி பேச எழுத தெரிந்தவராக இருக்க வேண்டும்.
05. கணினி இயக்குவதில் தேர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும்.

### 02. எழுதுனர்/கணக்குப்பதியுனர் (பெண்)

01. க.பொ.த.சாதாரண தர, க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.
02. எழுதுனர்/கணக்குப்பதியுனர் பணிகளில் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
03. 25 - 35 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
04. இரு வேலைகளிலும் முன்அனுபவம் உடையவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 03. சிற்றூழியர்/அலுவலக உதவியாளர் (ஆண்)

01. எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. மேற்படி பணிகளில் அனுபவம் உடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*மேற்படி விண்ணப்பங்கள் யாவும் சுயமான கையொப்பத்தில் நிரப்பப்பட்டு 31.03.2003க்கு முன்னதாக "பொறுப்பாளர், தமிழீழ சுகாதார சேவைகள், கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

*பொறுப்பாளர்,*
*தமிழீழ சுகாதார சேவைகள்,*
*தமிழீழம்.*

(ச-8036)

# கூட்டுப்படைகளை அழிக்குமாறு சதாம் அறைகூவல்;

# ஆக்கிரமிப்பை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுகை!

## முன்நகர்வின் வேகம் குறைகிறது

**ஈராக்கில் அமெரிக்கா, பிரிட்டன் கூட்டுப்படைகளின் போரிற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்திருப்பதாக வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கைகளில் ஆயுதங்களை ஏந்தியவாறு தலைநகர் பாக்தாத்திலும் ஏனைய நகர்களிலும் அலைந்து திரிவதாகவும் கூறப்படுகிறது.**

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் கூட்டுப்படைகளைக் கண்டவுடன் தாக்கியழிக்குமாறு தமது மக்களுக்குஉத்தரவு பிறப்பித்துள்ளார். ஈராக்கிய தகவல் துறை அமைச்சர் நாட்டு மக்களுக்கு சதாம் விடுத்த அறிக்கையை தொலைக்காட்சி வாயிலாக வெளியிட்டார்.

இதேவேளை, ஏழாவது நாளாக நேற்றும் இருதரப்பினரிடையே மோதல்கள் இடம்பெற்றதாயினும், அமெரிக்க கூட்டுப்படைகளின் முன்னேற்ற நடவடிக்கை சற்று மந்த கதியில் இருந்ததாக அறிவிக்கப்படுகின்றது. எனினும் தலைநகர் பாக்தாத் நேற்று அதிகாலை விமானங்களாலும் ஏவுகணைகளாலும் தாக்கப்பட்டுள்ளது.

பாக்தாத்தின் மத்திய பகுதி மீது அதிகாலை முப்பதுக்கும் மேற்பட்ட பாரிய குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. பெரிய கட்டடம் ஒன்றும் அழிவுற்றது.

அத்தோடு, உள்ளூர் ஒலிபரப்புச் சேவையும்நேற்று இயங்கவில்லை. எனினும், செயற்கைக் கோள் ஒலிபரப்புச்சேவை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

ஈராக்கில் கடந்த ஆறு நாட்களில் அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் வாஷிங்டனில் தெரிவித்தார்.

இருப்பினும் ஈராக்கியப்படைகள் எதிர்த்தாக்குதல் நடத்தி வருவதாகவும், அவர் ஒப்புக்கொண்டார். பாக்தாத்திற்கு தெற்கேயுள்ள நசாப் நகரம் மீது நடந்த மோதலில் சுமார் 300 ஈராக் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஈராக்கின் முக்கிய நகரங்களான உல் ஹசோர், ஒஸ்ரியா, பஸ்ரா ஆகியவை தங்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக கூட்டுப்படையினர் கூறுகின்றனர். ஆனால், இதை பாக்தாத் முற்றாக மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



விமானத்தாக்குதலுக்குள்ளான கட்டடம் ஒன்றின் முன்னால் நிற்கும் ஈராக்கியர்கள்.




கிழக்கு ஜோர்தானில் அகதி முகாம் அருகில் நின்று கொண்டிருக்கும் ஈராக்கிய அகதிகள்.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

(சிட்னி)

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் நேற்றுப் பாடசாலை மாணவர்கள் பெருமளவில் ஈராக் மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தடுத்து நிறுத்த முற்பட்ட பொலிஸாருடன் மாணவர்கள் கைகலப்பிலும் ஈடுபட்டனர். அத்தோடு, வீதி விளக்குகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.



பாக்தாத்தை விட்டு வெளியேறும் ஈராக்கியர் ஒருவர் தமது வீட்டின் கதவைக் கொண்டு செல்கிறார்.

## அதிகாரிகள் வெளியேற்றத்தால் ஐ.நா.உதவி நடவடிக்கை பாதிப்பு

ஈராக்கிற்கான ஐ.நாவின் மனிதாபிமான அவசர உதவிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதற்குப் பொறுப்பான ஐ.நா அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமையே இந்நிலைக்கு காரணமாகும்.

ஈராக்மீது ஐ.நா பொருளாதாரத்தடை விதித்ததைத் தொடர்ந்து அம்மக்கள் உணவுக்கான தேவைக்கு மட்டும் எண்ணெயை விற்க அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலையில் இப்பணிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து எண்ணெயை விற்கும் திட்டத்தை பொதுச்செயலர் கொபிஅனான் தனது நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொண்டுவர முடிவு செய்துள்ளார். இதுதொடர்பான கூட்டம் அடுத்தவாரம் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளது.

## ஈராக் தூதரகங்களை மூடும் கோரிக்கை பல்வேறு நாடுகளால் நிராகரிப்பு!

ஈராக்கிய தூதரகங்களை மூடி அங்குள்ள அதன் ராஜதந்திரிகளை வெளியேற்றி விடுமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை பல நாடுகள் நிராகரித்துள்ளன.

பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா, நெதர்லாந்து,இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகள் இதை நிராகரித்துள்ளன.

அமெரிக்காவின் போரை ஆதரிக்கும் ஜப்பான் ஈராக்குடன் தொடர்ந்தும் தொடர்புகளை வைத்திருக்கவே விரும்புவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை, அவுஸ்திரேலியா அரசு மாத்திரமே அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று ஈராக்கிய தூதரகத்தை மூடியுள்ளதுடன் அந்நாடுகளின் ராஜதந்திரிகள் அனைவரையும் வெளியேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உம் காஸர் துறைமுகத்திலிருந்து வரும் அமெரிக்க இராணுவ வாகன அணிக்கு குவைத் எல்லையில் வெள்ளைக் கொடியைக் காட்டும் ஈராக்கியர் ஒருவர்.

## சர்வதேச விமானப் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தத்தால் பத்து பில். டொலர் இழப்பு

### விமானப் போக்குவரத்து நிறுவனம் அறிவிப்பு

சர்வதேச கவனங்களை ஈர்த்துள்ள அமெரிக்க தலைமையிலான ஈராக் போரினால் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் சுமார் பத்து பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த யுத்த நிலைமை மேலும்நீடித்தால் முப்பது பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படும்என்றும் அது அச்சம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு ஐரோப்பாவிலிருந்து சுமார் 150 விமானங்கள் தென்மேற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வழமையான போக்குவரத்து பயணத்தில் ஈடுபடுவதுண்டு. ஆனால் இப்போது அவை அனைத்தும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று சர்வதேச விமானப்போக்குவரத்து சேவை தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகள்தமது வழக்கமான விமானப் போக்குவரத்துச் சேவையை அனுமதிக்கவேண்டும் என்று கோரியுள்ள சர்வதேச விமானப் போக்குவரத்து சேவை நிலையம் சர்வதேச பொருளாதாரச்சந்தையில் வீழ்ச்சியைத் தடுப்பதற்காகவே இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

## மத்திய அரசுடனான உறவை தி.மு.க. பரிசீலிக்கிறது!

(சென்னை)

இந்திய மத்தியரசுடன் கொண்டுள்ளஉறவை மறுபரிசீலனை செய்ய ஆலோசித்து வருகின்றோம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பாரதீய ஜனதாக்கட்சியுடனான உறவு நன்றாக இருக்கிறதா என்று கேட்டபோது;உறவு இருந்தால் தானே நன்றாக இருக்கிறதா? இல்லையா? என்ற கேள்வி எழும். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் தி.மு.க .விற்கும் பாரதீய ஜனதாவிற்கும் இடையே உறவே கிடையாது என்றார்.

மாறிவருகின்ற சூழ்நிலையில் மத்திய அரசுடன் உறவு கொண்டுள்ள தி.மு.க போன்ற கட்சிகள் தங்களின் நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு அழைப்புவிடுத்துள்ளாரே என்று கேட்டபோது; நாங்களும் அதைப்பற்றித்தான் யோசனை செய்துகொண்டு இருக்கின்றோம் எனக் கருணாநிதி தெரிவித்தார்.

# 12 ஆண்டுகளில் மீண்டும் வளைகுடாவில் வெடித்த போர்

ஓநாய் வருகின்றது ஓநாய் வருகின்றது..... எனும் கதையாய் இன்று போர்... நாளை போர்.... ஒரு வாரத்தில் போர் என்று கூறி வந்த அமெரிக்க அதிபர் 'புஷ்' திடீரென, ஐ.நா சபையின் அனுமதியைக் கூடப் பெறாது உலகில் பெரும் பான்மை மக்களின் எதிர்ப்பையும் அலட்சியப்படுத்தி, ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பிக்க கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

ஈராக் நேரப்படி அதிகாலை 4.30 க்கு தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஈராக் மீதான போருக்கு ஐ.நா.சபையில் அனுமதி கோரி, ஐ.நா.சபையின் பிரேரணை தாக்கல் செய்த அமெரிக்காவின் கவனத்திற்கு வீட்டோ(Veto) அதிகார நாடுகள் (ரஷ்யா, பிரான்ஸ், சீனா) அங்கீகாரம் அளிக்காமையினால், அத்தீர் மானத்தை வாபஸ் பெற்ற புஷ், மறுபுறம் 48 மணி நேரத்தில் சதாம் ஹுசைனும் மகன்மாரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று காலக்கெடு விதித்தார்.

காலக்கெடு முடிந்த ஒன்றரை மணி நேரத்தில்,மத்திய தரைக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 03 அதி நவீன போர்க் கப்பல்களில் இருந்த 40,000 பேர் வீரர்கள்,குருஸ் ஏவுகணைகளை வீசத்தொடங்கினர்.

அதே நேரம் அதே கப்பலில் இருந்த 80 தாக்குதல் விமானங்கள் பாக்தாத்தில் சதாமின் மாளிகை, அரச அலுவலகங்கள் ஏனைய முக்கிய இலக்குகள் கட்டடங்கள் மீது இலக்கு வைத்துத்தாக்கின.

அதே போல், கட்டார் நாட்டின் தலைநகர் டோகாவில் இருந்து புறப்பட்ட விமானங்கள் ஈராக்கின் விமானத்தளங்களை குறிவைத்துக் குண்டு மழை பொழிந்தன. விமானத் தாக்குதல் நடந்த வேளை அதிகாலை என்பதால்,எங்கும் புகை மண்டலத்துடன், ஏவுகணைகளின் தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலியையும் தவிர வேறு எதுவுமே கேட்க முடியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

மறுபுறம், குவைத்தின் வடக்கே கடலில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க கடற்படையின் 5ஆவது பிரிவைச் சேர்ந்த 04 போர்க் கப்பல்களிலிருந்தும் ஏவுகணைகள் புறப்பட்டு ஈராக் எல்லையில் சரமாரியாகத் தாக்கியதாகவும், எங்கும் புகை மண்டலம் தவிர வேறு எதையுமே காணமுடிய வில்லை என்று தெரியவருகின்றது.

"பாலைவன எலிகள்"(Desert Rats) என அழைக்கப்படும் 120 கவச வாகனங்கள்,டாங்கிகள், பாலைவனப் புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஈராக்கை நோக்கிப் புறப்பட்டு, செல்வதுடன் ஈராக்கிய தரைப்படையுடன் நேரடி மோதலிலும் ஈடுபட்டு வருவதாக வும் கூறப்படுகின்றன.

தாக்குதல்கள் தொடங்கிய இரண்டாம் நாள் ஈராக்கின் எல்லையூர் நகரமான "சின்காந் தரை" அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியதுடன், தெற்கு, நோக்கியும் படைகள் முன்னேறுவதாகவும் அமெரிக்கா அறிவித்தது.

அத்துடன், ஈராக்கின் முக்கிய இரண்டாவது பெரிய நகரமான பஹ்ரா மீது கடும் ஏவுகணைத் தாக்குதல்கள் குண்டு வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. தெற்கு ஈராக் பாலைவனப்பகுதியில் எவ்வித எதிர்ப்பும் இன்றி கவச வாகனங்கள் முன்னேறியதாகவும் கூறப்பட்டது.

இரண்டாம் நாள் தாக்குதல் களில் அவுஸ்திரேலியாவின் 2000 சிறப்புப் படையினர் அமெரிக்க பிரிட்டிஷ் துருப்புக்களுடன் சேர்ந்து ஈராக்கினுள் 150 கிலோ மீற்றர் முன்னேறியதாகவும் கூறப்பட்டது.

மூன்றாம் நாள் போரில்,




ஈராக்கிய வடபகுதியிலுள்ள திக்ரூக், மைகல் நகரங்களில் இராணுவ இலக்குகள் மீது அமெரிக்கா குண்டுகளை வீசியது.

அத்துடன், ஈராக்கின் மேற்குப் பகுதியில் ஜோடானுக்கும் இஸ்ரேலுக்கும் மிகவும் நெருக்க மான 02 முக்கிய விமானத் தளங்களை அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியுள்ளதுடன், உம்மா கஸர் துறைமுக நகரும் கைப்பற்றப்பட்டதாகவும், ரம்லாலயாவில் எரிந்து கொண்டிருந்த10 எண்ணெய் வயல்களை அமெரிக்கப்படைகள் தீயைக் கட்டுப்படுத்தி கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், யூப்பிரட்டிஷ் நதிக் கரையில் உள்ள நஸ்ரியா



நகருக்குள் அமெரிக்கப்படைகள் புகுந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நான்காம்நாள் தாக்குதலில், 3000 ஈராக்கிய வீரர்கள் சரண டைந்துள்ளதாக அமெரிக்கப் பத்திரிகை கூறியுள்ளது.

ஐந்தாம் நாள் தாக்குதல் களில்,தென்ஈராக்கில் 600 ஈராக்கிய வீரர்களை கைது செய்ததாகவும், நஸ்ரியா நகரில் தமது தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியும் வருகின்றன.

அத்துடன், வளைகுடாப் பகுதியில் சர்வதேச கடற் பகுதியின் மேல் 02 பிரிட்டிஷ் உலங்குவானூர்திகள் மோதிக் கொண்டுள்ளன.

யூப்பிரட்டிஷ் முக்கிய பாலம் ஒன்றை அமெரிக்கப்படைகள் கைப்பற்றியுள்ளதாகவும்,அடுத்த பாலத்தைக் கைப்பற்ற முன்னேறு வதாகவும் கூறப்பட்டது.

ஆறாம் நாள் தாக்குதல்களில், நீர்விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையில் மக்களுக்குத் தூய்மை யான நீர் கிடைக்கவில்லை.

இதுவரை நடந்த ஐந்து நாட்களின் தாக்குதல்களிலும் தம்மைப் பலவீனர்களாகக் காட்டிக்கொண்ட ஈராக்கியப் படைகள், ஆறாம் நாள் தாக்குதல் களில் மிகவும் திறமையாகச் செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நாட்டின் தெற்குப் பகுதியில் அங்குமிங்குமாக எதிர்ப்பைக் காட்டிக்கொண்டு, அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளை முன்னேறி வரவழைத்து திடீரென கெரில்லா முறையில் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது.

பஸ்ரா நகரில் ஊடுருவலை மேற்கொண்ட பிரிட்டிஷ் இராணு வத்தினரை, ஈராக் இராணுவத்தி னர் ஆக்ரோஷமாக தாக்கிய தால்,பிரிட்டிஷ் இராணுவம் பின்வாங்கியுள்ளது.

அத்துடன் பல இடங்களில் உலங்குவானூர்திகளைச் சுட்டுவீழ்த்தி யுள்ள ஈராக்கிய இராணுவம் விமானிகளையும் சிறைப்பிடித் துள்ளது.

ஆத்திரமடைந்த அமெரிக்கா, விமானங்கள் மூலம், ஏவுகணை களையும் வீசியது. அதற்குப் பதிலடியாக விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஈராக்கிய இராணுவம் செலுத்தியுள்ளது.

நேற்றைய தாக்குதல்களில் பாலைவன மணல், புயல் காரணமாக சில நூறு யாருக்கு மேல் எதுவும் தெரியாத அளவுக்கு வேகமாக இருப்பதால், உலங்கு வானூர்திகள் பறக்க முடியா மலும், படைகள் முன்னேற முடியாமலும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஈராக்கில் உல்ஹாசர், பஹ்ரா, அல் - நஜெவ்ரினா, இங்குஸ், டிஸ்ரா கந்தாவ் ஆகிய நகரங்களில், அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளை ஈராக் படைகள் கடுமையாக எதிர்த்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதுவரை நடந்த தாக்குதல் களில் 70 அமெரிக்கப்படை யினரும் 20 பிரிட்டிஷ் படை யினரும் கொல்லப்பட்டிருப்பதுடன் பலர் காணாமலும் போயுள்ள தாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் கூட்டணிப்படைகள் தோல்வியை ஒப்புக்கொண்டால், தாம் பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாக துணைப் பிரதமர் தாரிக் அஸிஸ் கூறியுள் ளார்.

இப்பொழுது அமெரிக்கா ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப்போவதாகக் கூறுகிறது. இது அதனது நகர்வில் ஏற்பட்டு ள்ள தேக்கநிலை மற்றும் இழப்புகளுக்குச் சாட்டுக் கூறும் ஒன்றாகவும் இருக்கலாம். அதேவேளை பாக்தாத் மக்களின் பாதுகாப்புக்காகவே தாக்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுவதும் இதுபோன்றதென்றே கூறவேண்டும்.

இத்தாக்குதல்களுக்கு மத்தியில், உலக நாடுகளிலுள்ள ஈராக்கிய தூதரகங்களை மூடிவிடுமாறு அமெரிக்கா ஏனைய நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் சதாமின் முக்கிய பிரதிநிதிகளை நாடுகடத்து மாறும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கேட்டுக்கொண்டுள் ளது. அமெரிக்காவில் ஈராக் அரசாங்கத்திற்குச் சொந்தமான இராஜதந்திர விவகாரங்களுடன் சம்பந்தமில்லாத அனைத்து சொத்துக்களையும் முடக்குமாறு திறைசேரி அமைச்சர் கூறியுள்ளார். ஏனெனில் இந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு புஷ் நிறைவேற்று கட்டளை பிறப்பித்துள்ளாராம்.

அதுமட்டுமன்றி ஈராக்கிய அரசின் அனைத்துச் சொத்துக் களையும் முடக்குமாறும் ஏனைய நாடுகளையும் கேட்டுக்கொள்ள புஷ், ரஷ்யாதான் ஈராக்கிற்கு இராணுவ தளபாடங்களை வழங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

சதாமின் ஆட்சி வரலாற்றில் ஒரு பகுதியாகவே இருக்கும், ஏனெ னில் அவர் கதை முடிந்துவிடும் என்று கூறும் அமெரிக்கப்பாது காப்பு அமைச்சர் "ரொனால் ரம் ஸ்பீல்ட்", தமது குறிக்கோள் நிறைவேறிவிட்டதும் உலகம் பாதுகாப்பானதாக மாறிவிடும் என்றும் சதாமிற்காக ஈராக்கியப் படைகளை சண்டைபோட வேண்டாம் என்பதுடன் அமெரிக் காவுக்கு காலனித்துவ ஆசை என்பதும் துளியும் கிடையாதாம் என்றும் கூறுகின்றார்.

ஆனால் ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனோ தாக்குதல்கள் ஆரம்பமானது முதல் ஈராக்கிய மக்களிடம் பொறுமைகாக்கு மாறும், வெற்றி நமதே என்று கூறி வருகின்றார்.

அத்துடன் ஈராக் அமைதியை விரும்புகின்றது. ஆனால் எதிரிகளை தோற்கடிக்கும் பலம் பொருந்தியது என்று கூறும் அவர், "அமெரிக்காவின் செயற் பாடு மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அவமானகரமான குற்றம்" என்று குற்றமும் சாட்டியுள்ளார்.

அநியாய காரர்களால் ஈராக் தாக்கப்பட்டுக் கொண்டிருப் பதாகவும் சிறுபிள்ளைத்தனமான புஷ்ஷினால் தான் இந்நிலை ஏற்பட்டது என்று கவலையும் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் ஈராக்கிய வீரர்கள் சரணடையவே மாட்டார்கள், எந்தத் தாக்குதல்களையும் எதிர்கொள்வார்கள், எதற்கும் தயாராக ஈராக்கியப் படைகளும், மக்களும் தயார் நிலையில் உள்ளதாகவும் சபதமிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி அடிக்கடி தொலைக்காட்சிகளில் தோன்றி, நமது உண்மையான விரோதிகள் சிக்கலில் உள்ளார்கள்; நமது பெருமிதமான மக்களும், இராணுவமும் தயார் நிலையில் அவர்களைக் கடுமையாக தாக்குங்கள்; துல்லியமாக, குறிபார்த்து தாக்குங்கள், உங்கள் தேசத்திற்கு எதிராகவும், உங்களுக்கு எதிராகவும் அவர்கள் குற்றங்களைச் செய்யாது தடுத் தால், அந்தத் தருணத்தில் வெற்றியைப் பெறுவீர்கள்; இறந்தவர்கள் தியாகிகள் ஆகி, சொர்க்கத்தை அடைவார்கள்" என்றும் உரையாற்றியுள்ளார்.

இவ்வாறு சதாம் ஹுசைன் அடிக்கடி தொலைக்காட்சிகளில் தோன்ற முக்கிய காரணங்கள் இருப்பதாக அரசியல் அவதானி கள் நம்புகின்றனர்.

தொலைக்காட்சியில் தோன்று வதால், "தொடர்பு சாதனம் தமது கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக வும், ஏவுகணைத் தாக்குதலில் சதாம் ஹுசைன் இறந்துவிட்டார்" எனும் அமெரிக்காவின் பொய்களை வெளிப்படுத்துவது ஈராக்கிய வீரர்களின் பெயர்க ளைக் குறிப்பிட்டு சிறப்பாகப் பாராட்டுவதால் அவர்களை உற்சாக மூட்டுவது இவ்வாறு தொடர்ந்து தொலைக்காட்சிகளில் திறம்பட சதாம் ஹுசைன் உரையாற்றினால் கூட்டணிப் படைகள் சிக்கலைத் தொடர்ந்து எதிர் நோக்கும் என்றும் அவதானி கள் நம்புகின்றனர்.

ஐ.நா.சபையின் அங்கீகாரத்தைப் பயன்படுத்தியே ஈராக்கை குறிபார்க்க இருந்த அமெரிக்காவு க்கு தோல்விதான் கிடைத்தது. ஈராக்கைத் தாக்க அங்கீகாரம் கிடைக்காதது அமெரிக்காவுக்கு தன்மானப் பிரச்சினையாகிவிட்டது.

அத்துடன் 48 மணிநேர காலகெடு விதித்து, ஈராக்கை சுற்றிப் படைகளை, போர்க் கப்பல்களை முப்படை நிறுத்திய போதும் கூட, ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், "என்னை அதிபராகத் தேர்வு செய்தது ஈராக்கிய மக்களே தவிர, அமெரிக்காவோ பிரிட்டிஷ்சோ அல்ல" என்று கூறிய துடன், பனங்காட்டு நரி சலசலப்பு க்கு அஞ்சாது என்பது போல இருந்துவிட்டவை அமெரிக்காவின் இரண்டாவது தன்மானப் பிரச்சினை.

எனவே; ஈராக்கில் தோல்வி கண்டால் அது பெரிய அவமான மாக (வியட்னாமை அடுத்து) அமைந்துவிடும் ரொனி பிளேய ருக்கோ தொழில் கட்சியினர் மத்தியில் முகம் கொடுப்பது முடியாத காரியமாகிவிடும்.

எனவே, அமெரிக்க, பிரிட்டிஷ் படைநகர்வுகளும், ஈராக்கிய எதிர்ப்புக்களும், உலக அரசியலை எப்படி மாற்றி அமைக்கப் போகின்றன... என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க முடியும்.

**அ. கலைவாணி**

## சுகாதார, போசணை, நலனோம்பு அமைச்சு.

## மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு

# ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2003

மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ், மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய திருமணமாகாத ஆண்/பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆட்சேர்த்துக் கொள்ளும் மொத்த எண்ணிக்கையில் 05 % ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.)

**கல்வித்தகைமைகள் :-**

அ. 2000,2001ஆம் ஆண்டுகளில் க.பொ.த.(உ/த) தோற்றி குறைந்த பட்சம் விஞ்ஞானத்துறையில் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

ஆ. க.பொ.த(சா/த) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் 06 விடயங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வித் தகமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்படி இரண்டு பரீட்சைகளினதும் பெறுபேற்று சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகளை இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள் :-**

அ. 2002,12,31ந் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆ. உயரம் 4அடி 10 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

இ. திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

ஈ. நாட்டில் எப்பாகத்திலும் கடமையாற்றக்கூடியவராக இருத்தலும், நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

உ. தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்கள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்படாது விடில் அவரது பெற்றோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் பெற்றோரின் பெயர்களை நிரூபிப்பதன் பொருட்டு பிறப்பு சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன், அவ்விண்ணப்பதாரிகள் 2000,2001 ஆண்டுகளின் உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் சனத்தொகை விகிதாசாரப்படி தேவையான எண்ணிக்கையினர் தேர்ந்தெடுக்கப்படுவர்

**விண்ணப்பிக்கும் முறை:-**

இவ் விண்ணப்பப்படிவத்தை கிளிநொச்சியில் உள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், விண்ணப்பப்படிவம் பெறுவதற்கு சமுகம் அளிக்கும் போது ரூபா 50 பெறுமதியுடைய வலுவுள்ள முத்திரையைச்சமர்ப்பித்து அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் செல்லுபடி நீக்கம் செய்யப்பட்டு, விண்ணப்பத்தைப் பெற்று, பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட் சேர்த்துக்கொள்ளல்" எனக் குறிப்பிட்டு,2003-04-15 ஆம்திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்(நிர்வாகம்-01)**
**சுகாதார ,போசணை நலனோம்பு அமைச்சு,**
**"சுவசிறிபாய"**
**385,வண.பத்தேகம. மலவங்ச தேரர்மாவத்த,**
**கொழும்பு-10.**

எமது அலுவலகத்தில் பெறப்படும்விண்ணப்பங்களைத்தவிர்ந்த ஏனைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் என்பதுடன் தபாலில் காணாமற் போதல்,காலதாமதம் என்பன கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**பயிற்சி அளிக்கும் திட்டம்:-**

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள்(ஆண்/பெண்) தாதிமார்களாக, தாதிமார் பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டு தமிழ்/ சிங்களம் மொழி மூலம் மூன்று ஆண்டுகளுக்குப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின் போது பயிலுனர்களுக்கு உதவுதொகைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

**திருமணமாகாத நிபந்தனைகளும், உடன்படிக்கையும்:-**

சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பத்தை அனுப்பும்திகதியன்று திருமணமாகாதவராக இருப்பதுடன் , பயிற்சி பெறும் மூன்று ஆண்டுகளுக்கும்திருமணமாகாதவராக இருத்தல் அவசியமாகும்.இதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கிராமசேவையாளரின் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன்இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**மா.சு. சே.பி பணிப்பாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-7819)

# புலிகள் - படையினர் மோதலைத் தவிர்க்க கண்காணிப்புக்குழு புதிய யோசனை

## -அடுத்த வாரம் முன்வைக்கும்

**கடற்பகுதியில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழு ஆலோசித்து வருகிறது.**

கடல் மற்றும் தரையில் சிறிலங்காப் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களைத் தவிர்க்க புதிய யோசனைகளைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்வைக்க இருக்கின்றது.

அது தொடர்பான புதிய திட்டத்தை கண்காணிப்புக்குழு தயாரித்து வருவதாகவும் இந்த யோசனைகள் அடுத்த வாரம் இரு தரப்புக்கும் அனுப்பி வைக்கப் படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் தரையில் அல்லது கடலில் இரு தரப்பும் மற்றைய தரப்பை கைது செய்தால் அவர்களை கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் பல புதிய யோசனைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# க.பொ.த. [உ/த] பரீட்சை ஏப்ரல் 21 ஆரம்பமாகும்

## தொடர்ச்சியாக மே 20 வரை பரீட்சை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 20 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

பரீட்சைகள் இரண்டு கட்டமாக நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய பரீட்சைகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

இம்முறை 2லட்சத்து 51 ஆயிரத்து 727 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இதில் 39 ஆயிரத்து 533 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர். கடந்த ஆண்டைவிட இவ்வருடம் ஒன்பதினாயிரம் பேர் குறைவாக விண்ணப்பித்துள்ளனர்.

இப்பரீட்சை நாட்டின் சகல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள 1781 நிலையங்களிலும் மற்றும் 265 இணைப்பு நிலையங்களிலும் நடைபெறவுள்ளன.

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய அடையாள அட்டையொன்றும் ஆயுர்வேத மருத்துவ அடையாள அட்டையொன்றும் கண்டெடுக்கப்பட்டு கிளி. ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி புன்னைநீராவி விசுவமடுக்குளம் 372970219V என்பவருடையதாகும். உரியவர் அலுவலக நேரத்தில் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் பெற்றுக் கொள்ளவும்.

வன்னேரி சோலை நாச்சிக்குடா வீதியில் பயில்பாக் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

செல்லையா விசுவநாதன் (சாந்தன்) என்பவருடைய நாட்குறிப்பு (டயறி) மற்றும் பணப்பற்றுச் சீட்டுக்கள் என்பவற்றுடன் போராளி தென்றல் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக் கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரங்களில் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிம னையில் பெற்றுக் கொள்ளவும் (பா)

# வவு.வில் தொண்டராசிரியர்கள் மறியற் போராட்டம்

தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கோரி நேற்று முன்தினம் வவுனியாவில் மறியற் போராட்டம் நடைபெற்றுள்ளது.

பல்லாண்டு காலமாகச் சேவை அடிப்படையில் கடமை புரியும் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, தொண்டராசிரியர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வவுனியா மாவட்ட பிரதிநிதிகளும் இணைந்து வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

# ஆறு திட்டங்களுக்கு ஜப்பான் நிதி உதவி

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட ஆறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று ஜப்பான் 33630 மில்லியன் ஜென்களை வழங்கவிருக்கின்றது.

இதற்கான ஒப்பந்தம் நிதி அமைச்சில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் சார்பில் நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸியும் ஜப்பான் அரசின் சார்பில் சிறிலங்காவுக்கான ஜப்பான் தூதுவர் செய்சிறோ ஒக்சிகாவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

பெருந்தோட்ட கைத்தொழிற் புனரமைப்பு, மாகாண வீதி அபிவிருத்தி, மின்சாரத்துறை புனரமைப்பு, வறுமையினால் பாதிக்கப்பட்டோரை பொருளாதார ரீதியில் பலப்படுத்தும் விடயங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆனந்தசங்கரிக்கு உப சபாநாயகர் பதவி!

இரண்டு வாரங்களுக்குள் உப சபாநாயகர் பதவியை கூட்டணித் தலைவர் வி. ஆனந்தசங்கரிக்கு வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதன்படி இரு வாரங்களுக்குள் இவருக்கு உபசபாநாயகர் பதவி வழங்கப்படும் என தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் [illegible]வித்துள்ளன. (23)

# தொண்[illegible]ராசிரியர் குறித்து பிரதம[illegible]ம் பேசுவேன்

## யாழ். ம[illegible]ட்ட பா.உ.ரவிராஜ்

வடக்கு கிழக்கில் உள்ள தொண்டராசிரியர் பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

தொண்டராசிரியர் சங்கத்தினர், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை பிரதமரிடம் கையளிப்பதற்காகப் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் இவ்வாறு தெரிவித்தார். (23)

# இராணுவ புலனாய்வாளருக்கு வந்த கடிதம் பற்றி விசாரணை

இராணுவ புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் ஒருவருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தைப் பிரித்துப்பார்த்த பெண்ணொருவர் மயங்கிய நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலையைச் சேர்ந்த பெண்மணியொ[illegible] வரே இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்துக்கு இடமான கடிதம் மட்டக்களப்பு பொலிசாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 26 . 07 . 1919

மறைவு 07 . 04 . 2002



**சின்னையா சபாபதி**

**(இளைப்பாறிய பிரதம லிகிதர்)**

**மாமூலை முள்ளியவளை**

**பண்போடும் பாசத்தோடும் எமை வளர்த்து ஆளாக்கி எம்முடன் வாழ்ந்த காலம் போதும் என்று எமைத் தவிக்க விட்டுப் பிரிந்தனையோ எம் அன்புத் தெய்வமே! நீ மறைந்து ஓராண்டு ஓடி மறைந்ததய்யா உம் மறைவு எம்மால் தாங்க முடியாது ஐயா என்றென்றும் கண்ணீரில் தவிக்கின்றோம். உன்முகம் காண உன் வார்த்தை கேட்க உன் நிழலைத் தேடி ஓடுகின்றோம் ஐயா.**

தகவல்:
சி.சிவநாயகம் (மருமகன்)
இலங்கை வங்கி,
முல்லைத்தீவு.

உன்பிரிவால் துயருறும்
மனைவி,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(2815)



## பணிநிலை வேண்டுகை

***வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவுமுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.***

**பணிநிலைகள்:-**

பணிநிலை - 01. கணக்குப் பதிவாளர்
02. களஞ்சியக் காப்பாளர்
03. எழுதுநர்கள்
04. உணவு பரிமாறுபவர்
05. பாதுகாப்புப் பணியாளர்
06. சமையலாளர்
07. விற்பனையாளர் (Hardware; Building Materials, Spair parts)

**கல்வித் தகைமை:**

1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:
க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.

**6ஆம் பணிநிலைக்கு:**
ஹோட்டல் முகாமைத்துவம் கற்கைநெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.

**அகவையெல்லை:** 18-50

**பால்:** இருபாலாரும்

**பட்டறிவு: -1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:**
குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6ஆம் பணிநிலைக்கு:
வெளிநாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
இரும்பகம், கட்டடப்பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை**

- உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
- தொலைவிடங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.

வேண்டுகைகள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 31.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: 45**

**மே/பா ஈழநாதம், யாழ்சாலை, கிளிநொச்சி**

(சி.8035)

# அமெரிக்காவின் எதிர்பார்ப்பிற்கு மாறாக நீளும் ஈராக் யுத்தம்!

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு ஒருவாரம் முடிவுற்றுவிட்டது. அமெரிக்கா தலைமையிலான கூட்டணித் துருப்புக்கள் விமானங்கள், உலங்கு வானூர்திகள் மற்றும் ஏவுகணைகள் துணையுடன் ஈராக் தலைநகர் உட்பட பல்வேறு நகரங்கள்மீதும் தாக்குதல்களை நடாத்தியவண்ணமுள்ளன.

இதேசமயம் அமெரிக்கா தலைமையிலான துருப்புக்கள் நீண்ட தூரம்வரையில் ஊடுருவியும் உள்ளன. அமெரிக்கத் தரப்பின் நேற்றைய தகவல்களின்படி பாக்தாத்திலிருந்து எழுபது கிலோமீற்றர் தொலைவில் அமெரிக்கப்படைகள் நிலைகொண்டுள்ளன. இதேவேளை கூட்டணிப்படைகள் தாக்குதல் நடத்திய முக்கிய நகர்களில் கடும் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுருக்கமாகக் கூறுவதானால் அமெரிக்கா தலைமையிலான படைகள் மூன்று முனைகளில் ஈராக்கிற்குள் நூறு கிலோ மீற்றருக்கும் அதிகமான தொலைவிற்கு ஊடுருவியுள்ள அதேவேளை - முக்கியமான நகர்கள் எதனையும் ஈராக்கியர்கள் அமெரிக்கத் துருப்புக்களிடம் இழந்துவிடவில்லைப் போல் தெரிகின்றது. ஒருசில நகர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். ஆனால் அமெரிக்கப் படைகள் ஈராக் தலைநகர் பக்தாத் மீதும் ஏனைய நகர்கள் மீதும் மேற்கொள்ளும் இடைவிடாத விமானக் குண்டுத்தாக்குதலும், ஏவுகணைத் தாக்குதலும் அமெரிக்கப் படைகள் எதிர்பார்த்த வேகத்தில் முன்னேற முடியாதநிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதையே வெளிப்படுத்துபவையாக உள்ளன.


இந்நிலையானது, அமெரிக்கா எதிர்பார்த்ததிற்கு மாறாக யுத்தம் தீவிரமானதாகவும், அதேவேளை முடிவிற்குக் கொண்டுவரமுடியாததாகவும் போய்விட்டது போன்றும் உள்ளது. அதாவது, அமெரிக்கத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியது போன்று இலகுவான நடவடிக்கையாக ஈராக் இருக்கப்போவதில்லை என்பது வெளிப்பட்டுள்ளது. இதனை அமெரிக்கத்தரப்பும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. யுத்தம் கடுமையானதாக இருப்பினும் இலக்கை இலகுவாக அடையும் வகையில் சவாலை எதிர்கொள்கின்றோம் என்ற அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவர்களின் கூற்றுக்களே இதை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளன. இதைத்தவிர ரஷ்யா ஈராக்கியர்களுக்கு இராணுவ உதவிமற்றும் தொழில்நுட்பப் பயிற்சி என்பனவற்றை அளித்து வருவதாகவும் அமெரிக்க சனாதிபதி குற்றம் சாட்டி யுள்ளமையானது யுத்தம் அமெரிக்கா எதிர்பார்த்தவாறு இல்லாமல் இருப்பதையே கோடி காட்டி நிற்கின்றது. அத்தோடு, பாக்தாத் நகரைப்பிடிப்ப தானால் 3000 துருப்புக்களை இழக்க வேண்டிவரும் என்பது போன்ற இராணுவ ஆய்வாளர் களின் மதிப்பீடுகள்வெளிவரத் தொடங்கியுள்ளமையானது, யுத்தத்தில் அமெரிக்கா வெற்றிபெறும் வாய்ப்பைக் கொண்டதாக இருப்பினும்கூட, அவர்கள் எதிர்பார்க்கைக்கு அமைய அவ் வெற்றி கிட்டுவதாக இருக்கப்போவதில்லை என்பதையே உணர்த்துவதாகவுள்ளது.

இதேவேளை, சில விமர்சகர்கள், ரஷ்யத்துருப்புக்கள் செச்சினியாவின் தலைநகர் குரோசினியில் சந்தித்தது போன்ற அவலத்தை பாக்தாத்தில் சந்திக்கவேண்டி நேரிடலாம் எனவும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். இதற்கு அவர்கள் ஈராக் துருப்புக்கள் கெரில்லா அணிகள் போன்று தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கருதிக் கொண்டுள்ளனர்.

இதனை உணர்த்துமாப்போன்றே ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான பஸ்ராவில் சண்டைகள் இடம்பெற்றுள்ளன. முதலில் கூட்டணிப்படைகள் நுழைந்த வேளையில் தாக்குதல்கள் இடம் பெறவில்லை. ஆயினும் பின்னர் சிறு குழுக்களாகத் தாக்குதல் நடத்தி அமெ- பிரிட்டன் படைகளுக்குச் சேதத்தை விளைவித்தனர். இதனால் நகரின் கட்டுப்பாடு கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்தபோது அதனிடம் பல எதிர்பார்க்கைகள் இருந்தன. அந்த மதிப்பீட்டின்படி குறைந்தது ஒருவார காலத்தில் ஈராக்கில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்திவிடலாம் என்றே கருதப்பட்டிருத்தல்வேண்டும். அமெரிக்காவின் எதிர்பார்க்கையின் படி, தாக்குதல் ஆரம்பித்து ஓரிரு நாட்களில் ஈராக் அதிபர் சதாம் ஹு"சைன் கொல்லப்படவோ அன்றி அவர் நாட்டை விட்டுத்தப்பி ஓடிவிடுவதற்கோ வாய்ப்பு உண்டு என்றே கருதப்பட்டது. அதாவது அமெரிக்கப்படைகளின் தொடர்ச்சியான விமான மற்றும் ஏவுகணைத்தாக்குதலே சதாம்ஹு"சைனை நாட்டைவிட்டு வெளியேற்றிவிடும் என்று மதிப்பிடப்பட்டது.

இதுஒருபுறம் இருக்க ஈராக் மீது தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்ததும் ஈராக்கிற்குள் பெரும் உள்நாட்டுக்கலவரம் வெடிக்கும் என அமெரிக்கா எதிர்பார்த்தது. குறிப்பாக சதாமினால் அடக்குமுறைக்கு உள்ளான ஈராக்கின் தெற்கில் உள்ள சுனி முஸ்லிம்கள் இக்கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் அவர்களே முன்னர் அட்டூழியம் புரிந்த ஈராக்கிய துருப்புக்களைக் கொன்றொழித்து விடுவார்கள் என்றும் கருதப்பட்டது.



இதேவேளை, குர்திஷ் மக்களின் உதவியுடன் வட பகுதியில் சதாம் ஹு"சைன் அரசிற்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டி ஈராக்கியப் படைகளை நிலைகுலையச் செய்து இலகுவிலேயே தோற்கடித்துவிட முடியும் எனவும் மதிப்பிடப்பட்டது.


ஆனால், எதிர்பார்த்தது போன்று சதாம் ஹு"சைன் கொல்லப்படவோ அன்றி நாட்டை விட்டோ ஓடவில்லை. அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலிலிருந்து சதாம் மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

அடுத்ததாக ஈராக்கின் தென்பகுதியில் உள்ள சுனி முஸ்லிம்கள் கலவரத்தில் இறங்கவில்லை. இந்நிலையானது, யுத்தம் தொடர்பான அமெரிக்காவின் மதிப்பீட்டை ஓரளவிற்கு பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது. அத்தோடு, இயற்கையாக உருவாகியுள்ள பாலைவனப் புயல்களும் அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது போல் தெரிகின்றது.

அதுமாத்திரமல்ல,அமெரிக்கத் துருப்புக்கள் சிலரோ அன்றி பலரோ (தகவல் சரியாக இல்லை.) ஈராக் துருப்புக்களிடம் சிக்கியமையும், அமெரிக்க உலங்குவானூர்திகள்,டாங்கிகள் ஈராக்கிடம் அடிவாங்கியுள்ளமையும் அமெரிக்கர்களுக்கு மனஉலைச்சலைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவும், ஈராக்கிய இராணுவத்திற்கு உற்சாகமூட்டுவதாகவும் ஆகியுள்ளன.

அதாவது, ஒருவார கால யுத்தமானது சதாம் ஹு"சைன் தலைமையினை, ஈராக்கை நிலைகுலையச் செய்ய வில்லை. ஈராக்கிற்குள் அமெ ரிக்கா தொலை தூரத்திற்கு ஊடுருவி இருப்பினும் சதாமின் அரச இயந்திரம் இயங்கிக் கொண்டேயுள்ளது.

ஆகையினால் அடுத்தவாரத்திலும் ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா உச்ச அளவில் நடத்தும் என்றே எதிர்பார்க்கலாம். ஆனால், அமெரிக்காவின் தாக்குதல் காலம் நீண்டுகொண்டே செல்லச்செல்ல ஈராக் விவகாரம் வேறு வடிவத்தினைப் பெறும் சாத்தியங்கள் உண்டு. அதாவது, ஈராக்கிலுள்ள மக்கள் தொடர்பான மனிதாபிமானப் பிரச்சினை பெரியளவினதாகத் தோற்றம்பெறக்கூடும் இது அமெரிக்காவைப் பொறுத்து அனுகூலம் மிக்கதொன்றாக இருக்கமாட்டாது.



ஏற்கனவே உலகின் அபிப்பிராயத்தினைப் புறம்தள்ளி அமெரிக்கா ஈராக் மீது யுத்தம்தொடுத்துள்ளது என்ற குற்றச்சாட்டு இருக்கையில் ஈராக்கில் பெரும் மனித அவலம் ஒன்று ஏற்படுமானால் அமெரிக்கா மீதான கண்டனங்கள் உச்சக் கட்டத்தை அடையும் என்றே எதிர் பார்க்கலாம்.

தற்பொழுதே பஸ்ரா போன்ற நகர்களில் குடிநீருக்கும்,மின்சாரத்திற்கும் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் , பெரும் மனிதாபிமானப் பிரச்சினை உருப்பெற்றுவிட்டதாகவும் சர்வதேச மனிதநேய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு, பெருமளவில் விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடைபெறுவதன் காரணமாகவும் பல எண்ணெய்க்கிணறுகள் தீப்பற்றி எரிவதன் காரணமாகவும் சூழல் மாசடைதல் பிரச்சினை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகையினால், எவ்வாறெனினும் ஈராக் யுத்தமானது விரைவில் முடிவிற்கு வராதுபோனால் பெரும்மனித அவலம் ஏற்படப்போவது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

— ஜெயராஜ்

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணசபை.

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## கேள்வி கோரல் — இல 13

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து நன்கொடை ஒன்றிற்கு இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்நன்கொடையின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருனராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | யாழ் / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 02 | கிளி / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 03 | முல் / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 04 | மன் / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 05 | வவு / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 06 | திரு / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 07 | மட் / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |
| 08 | அம் / நிகொட் / நெஅ / ஈடி / 02 | 1000/- | 20,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகள் கோருவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.
   i. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்விகோருபவர் திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் காய்ச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்க வேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழை சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றார்.
   ii. ஒப்பந்தத்தைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிப்பதற்கு கேள்விதாரருக்கு இயலுமானதாக இருக்கவேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
   iii. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

4. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள எட்டுக்கேள்வியில் ஒன்றுஅல்லது அதற்கு மேற்பட்ட வற்றிற்கு கேள்வி கோரலாம். ஆனால் இத்திட்டத்தின் கீழ் பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கு நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட இரண்டு ஒப்பந்தத்துக்கு கூடுதலான ஒப்பந்தத்தைப் பெற தகுதியற்றவராவார்.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்பபடிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்(NECORD), 140, மின்சாரநிலையவீதி, திருகோணமலை என்ற விலாசத்தில் உள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல:026-27434, தொலை நகல்:026-27401, மின் அஞ்சல் necord@Sltnet.Lk

6. கேள்வி ஆவணங்களை 2003 மார்ச் 26ம் திகதியிலிருந்து 2003-ஏப்ரல்-04ம்திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படிஅலுவலகத்திலிருந்து இதுதொடர்பாக பந்தி-2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

7. கேள்விகோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு-1 வாசகம் 2இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில் இது தொடர்பாக பந்தி 5ல்குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும்வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை NECORD 140 மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு குறிப்பிட்ட பிணைப்பணம்அடங்கலாக 2003-ஏப்ரல்-10ஆம் திகதி பிற்பகல் 2.30க்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்குஅல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

10. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாகத்தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

**து.லங்காநேசன்,**
திட்டப்பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்(நிகொட்)
140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

ஜி7818



சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக - அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ளவேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-03-2003

## சிந்தனை மாறவில்லை?

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் எரிபொருட்களுக்கு-பெற்றோல், டீசல் என்பவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சில வேளைகளில் ஒரு லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படுவதும், அனேகவேளைகளில் அதுவும் அற்றதொரு நிலைமையே காணப்படுகின்றது.

இத்தகைய தட்டுப்பாட்டிற்கு இப்பிரதேசத்திற்கு எரிபொருள் விநியோகத்தினை அரசாங்கம் மட்டுப்படுத்தியுள்ளமையே காரணமாகும். கிளி.மாவட்ட அரச செயலகத்தின் புள்ளி விபரத்தின்படி கிளிநொச்சி மாவட்டத்திற்குத் தேவையான எரிபொருளில் மூன்றில் ஒரு பங்கு எரிபொருட்களே தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்திற்கு வன்னிப்பிரதேசத்திலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை குறித்த புள்ளி விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையே காரணம் என்றதொரு சாட்டுக் கூறப்படுகின்றது. ஆனால், இது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு நியாயம் அல்ல. ஏனெனில் வாகனங்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையிலேயோ அன்றி மாவட்டங்களில் உள்ள பதிவின் அடிப்படையிலேயோ எரிபொருள் விநியோகம் இலங்கையின் எப்பிரதேசத்திற்கும் மேற்கொள்ளப் படுவதில்லை. அவ்வாறு மேற்கொள்ளப்படுவது திட்டமிட்ட ரீதியில் ஒரு கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையே ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டு ஒரு வருடமும், ஒரு மாதத்திற்கும் மேலாகி விட்டது. அதாவது பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. இந்நிலையில் எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தவும்/கட்டுப்படுத்தவும் அரசாங்கத்தரப்பு மேற்கொள்ளும் முயற்சியானது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே உள்ளது.

புரிந்துணர்வு உடன்பாட்டில் எரிபொருள், சீமெந்து போன்றவற்றின் விநியோகத்தில் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்கு விதிகள் சில கூறப்பட்டுள்ள போதும், யுத்த நிறுத்தம் உறுதி செய்யப்பட்டு இயல்பு நிலை மீண்டு வரும் நிலையில் இவற்றின் விநியோகத்தில் தளர்ச்சி ஏற்பட்டிருத்தல் வேண்டும். அப்பொழுதே சமாதான முயற்சிகள் மீதான நம்பிக்கையும் உறுதிப்பாடும் வளர்ச்சி அடையக் கூடும்.

சரி, இதுதான் ஒருபுறம் இருக்கட்டும் இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் தனியாக அங்கு பதிவில் உள்ள வாகனங்கள் மட்டும் தான் ஓடுகின்றனவா? எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புகின்றனவா?

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் பெருமளவில் ஓடுகின்றன. இவ்வாகனங்கள் யாவும் இங்கேயே எரிபொருளை நிரப்பிக்கொள்கின்றன. ஆனால், இவ்வாகனங்களின் பதிவுகள் எவையும் இங்கு மேற்கொள்ளப்பட்டவையாக இல்லை. அவ்வாறானால் இவ்வாகனங்களுக்கு இங்கு எரிபொருள் நிரப்புதல் கூடாதா? அவ்வாறானால் அவர்கள் எரிபொருள் நிரப்புவதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து செல்ல வேண்டுமா?

இது ஒருபுறம் இருக்க இன்று ஏ-9 பாதை திறப்பால் நாளாந்தம் பல நூறு வாகனங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் ஊடாகச் செல்கின்றன. இவற்றில் ஒரு தொகுதி வாகனங்கள் இங்கேயும் எரிபொருள் நிரப்பிக் கொள்கின்றன. இந்நிலையில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளை எங்கிருந்து பெற்றுக் கொள்வது? ஏ-9 வீதியில் வரும் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புதல் கூடாதா?

இவை ஒரு புறம் இருக்க, மின்சாரத் தேவைக்கென பெருமளவில் இன்று மின்பிறப்பாக்கிகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றிற்கு கணிசமான எரிபொருள் தேவையாகவுள்ளது. பதியப்பட்ட வாகனங்களுக்கே எரிபொருள் எனின், மின்பிறப்பாக்கிகளுக்கு எரிபொருளை எங்கிருந்து பெறுவது? மின்பிறப்பாக்கிகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதா?

மேற்கூறப்பட்டவற்றைத் தவிர எரிபொருளின் தேவைக்கும், பயன்பாட்டின் அதிகரிப்பிற்கும் பல காரணிகள் உள்ளன. ஆனால், இவற்றையெல்லாம் புறந்தள்ளி எரிபொருள் விநியோகத்தை அரசாங்கம் மட்டுப்படுத்த முனைவதானது அரசாங்கம் இன்னமும் தடைகள், கட்டுப்பாடுகள் என்பனவற்றில் ஆர்வம் கொண்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளோ, அரசியல் தீர்வு நடவடிக்கைகளோ நம்பிக்கையுடன் செயற்படுவதாகக் கொள்வதற்கானதொன்றல்ல. அரசாங்கம் ஒடுக்குமுறைச் சிந்தனைகளில் இருந்து விடுபடுவதில் சிரமப்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

# ஐ.தே.மு ஒரு வருடம் ஆட்சியிலிருந்தால் பொருளாதாரமும் இறைமையும் அழியும்

### -சனாதிபதியின் ஆலோசகர் கூறுகிறார்

(கொழும்பு)

''இன்னும் ஒரு வருட காலத்திற்கு நாட்டை ஐ.தே.முன்னணியிடம் விட்டுவைப்போமானால் நாட்டின் இறைமையும் பொருளாதாரமும் முற்றாக அழிந்துவிடும். இப்போது புதிய அரசு ஒன்றை எதிர்பார்த்து மக்கள்வெள்ளம் திரண்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்பு எமது அமைச்சரவையின் கீழ் புதிய அரசை உருவாக்குவோம்'' இவ்வாறு கம்பஹா மாவட்ட எம்.பியும் சனாதிபதியின் ஆலோசகருமான அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

அப்புத்தளை தேர்தல் தொகுதியில் சிறி.சு.க.யின் அமைப்பாளரை அறிமுகம் செய்து வைத்துப் பேசியபோது மேலும் அவர் கூறியதாவது.

இவ்வரசுக்கெதிரான முதலாவது அலை தோன்றியது அக்குரஸ்ஸ தொகுதியிலேயே அங்கு ஐ.தே.க மூன்றாவது இடத்தையே பெற்றது. எமது தலைவர்களுள் எனக்கு மட்டுமே அங்கு செல்ல முடிந்தது.

இரண்டாவது மக்கள் அலை கூடியது மார்ச் 10 ம் திகதி. எட்டு லட்சம் பேர் அங்கு திரண்டனர். 1994ம் ஆண்டில் ஐ.தே.க தோல்வியடைந்த பின் ஐந்து வருடம் கழிந்தும் கூட இவ்வாறான மக்கள் வெள்ளத்தைக் கண்டிருக்க முடியாது இது ஏன்? மக்கள் இந்த அரசில் வைத்திருக்கும் நம்பிக்கையீனமே. அன்று யூரியா, பசளை 400 ரூபா. இன்று 1100 ரூபா. நெல்லுக்கு அன்று ஒரு கிலோவுக்கு 12 ரூபா வழங்கினோம். பொருட்களின் விலையுயர்வால் எனக்கே பாதிப்பு என்றால் பொது மக்களாகிய உங்களுக்கு எப்படி இருக்கும்? இந்த அரசு வழங்கிய எந்த வாக்குறுதியையுமே நிறைவேற்றவில்லை.

இன்று எஸ்.பி திஸாநாயக்க சனாதிபதியைத் தாக்கிப் பேசுகிறார் தேர்தலின் வெற்றி முடிவு வரமுன் அவரது வீடு தீக்கிரையாகும். சனாதிபதி நினைத்தால் இப்பொழுதே ஆட்சியாளரை வீட்டுக்கு அனுப்ப முடியும். எனினும் எங்களுக்குக் கிடைத்துள்ள ஆதரவைப் பயன்படுத்தி, வரும் ஜனவரி முதலாம் திகதி நாங்கள் புதிய அரசை அமைப்போம் என்றார்.

# பலமின்றி அதிகாரத்தை பாவிக்க மாட்டேன் சனாதிபதியின் கூற்றினால் முரண்பாடு!

(கொழும்பு)

"ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் பொ.ஐ.முன்னணியுடன் இணைந்தால் அதனூடாக பாராளுமன்றில் பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் பட்சத்தில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி சபையைக் கலைத்துவிட முடியும் என்றும் பெரும்பான்மை கிடைக்காதவிடத்து அதிகாரத்தினால் பாராளுமன்றைக் கலைக்கும் எண்ணம் தமக்குக் கிடையாது" இவ்வாறு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன் ஹக்கீம், பேரியல் அஷ்ரப் ஆகியோர் அடங்கிய முஸ்லிம் குழுவினரிடம் சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்து வெளிப்பாட்டின் காரணமாக ஜே.வி.பி தலைவர்களிடமும் அவர்களோடு இணைந்து அரசைக் கைப்பற்ற முனையும் சு.க.யின் சில தலைவர்களிடமும் மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது.

பொ.ஐ.மு யுடன் கூட்டு சேர்வதன் மூலம் சனாதிபதியினால் பாராளுமன்றைக் கலைத்துவிட ஜே.வி.பி தந்திரோபாயம் செய்தது. மேலும், மூன்று மாதங்கள் முடியுமுன் கலைத்து விடுவதாக சனாதிபதி வாக்குறுதியளித்திருந்ததைத் தமது அமைப்பாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் கூறியிருந்தது.

உள்ளூர்த் தகவல்களின் படி அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, ஆகியோர் தமக்கு ஆளும் கட்சியில் இருந்து சிலரின் ஆதரவைப் பெறமுடியும் எனவும் தெரிவித்துள்ளதால், இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தமக்கு ஆதரவு வழங்குமாறும் கோரியுள்ளனர்.

எனினும் இந்தக் கட்சிமாறும் கூத்துக்களில் நம்பிக்கையற்ற சனாதிபதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். இதனிடையில் சிலர் பொதுத் தேர்தலுக்கு முன் மாகாணசபைத் தேர்தலின் மூலம் அரசை நாடிபிடித்துப் பார்த்து அதன் பிறகு பொதுத்தேர்தல் பற்றி சிந்திக்கலாம் என சனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளனர் எனச் சிங்களப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

## 10,000 பட்டதாரிகளுக்கு மே முதல் தொழில்வாய்ப்பு

10,000 பட்டதாரிகளுக்கு மே மாதம் முதலாம் திகதி முதல் அரச அல்லது தனியார் நிறுவனங்களில் தொழில் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டமொன்றை அரசு வகுத்துள்ளதாக கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அவல வீராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக வர்த்தக சம்மேளனம் ஏற்கனவே தனியார் நிறுவனங்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும், இவர்களுக்கு மாதாந்தம் 4000 ரூபா கொடுப்பனவும், கணினித்தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி மூலமாக விசேட பயிற்சியும் வழங்கப்படும்.

இதுவரை 25, 882 வேலையற்ற பட்டதாரிகள் விஞ்ஞான தொழில்நுட்ப பயிற்சி அமைச்சில் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் படியே இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

## யாழ். பொது நூலகத்திற்கு பதினேழாயிரம் நூல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்திற்கு என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பதினேழாயிரம் நூல்களை கடந்த திங்களன்று வழங்கி உள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரிடம் இந்தநூல்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, இன்னுமொரு தொகுதி நூல்களை வழங்கவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நடவடிக்கை எடுத்துள்ளார். (23)

# ரத்வத்தவின் மகன்மார் தலைமையிலான குழு நெற்றியில் துப்பாக்கியை வைத்து மிரட்டியது

### - உடத்தலவின்ன படுகொலை விசாரணையில் சாட்சியம்


(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது பொல்கொல்ல கூட்டுறவு வித்தியாலயவாக்களிப்பு நிலையத்திற்குள் புகுந்த லொகான் மற்றும் சானுக ரத்வத்த தலைமையிலான குழுவினர் ரி.56 ரக துப்பாக்கியை நெற்றியில் வைத்து அச்சுறுத்தல் விடுத்ததாக வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பிற்காக இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பழனியாண்டி சிவஞானம் தெரிவித்துள்ளார்.

உடத்தலவின்ன மனிதப் படுகொலை சம்பவம் தொடர்பான வழக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அநுருத்த ரத்வத்தவின் புதல்வர்களான சானுக, லொகான் ஆகியோர் வாக்களிக்க வந்தவர்களை அச்சுறுத்தி மிரட்டியதாகவும் சாட்சியாளர் தெரிவித்தார். ரி-56 ரக துப்பாக்கியை காண்பித்து வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அச்சம் அடைந்த தான், அவர்களுக்கு தன்னாலும் சுட முடியும் எனத் தெரிவித்ததாகத், கூறினார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய குழு முன்னிலையில் நடைபெறும் இவ் வழக்கு விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க விமான[illegible] தாக்குதலில் [illegible] தொகுதி

## ஆனந்தசங்கரியின் உரைக்கு வவு.வெகுசன அமைப்பு கண்டனம்

புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் கூற்றை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கண்டித்துள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பு ஆனந்த சங்கரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இக் கருத்தானது தங்களின் தனிப்பட்ட கருத்தா? அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏகோபித்த கருத்தா? என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. இன்றைய சூழல் ஈழத்தமிழர்களும். உலக நாடுகளில் வாழும் அனைத்து தமிழர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளையே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு சமாதானத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் இக்கால கட்டத்தில் தங்களது பொறுப்பற்ற செய்தியறிக்கை தமிழ்மக்களின் மனதினை பெரிதும் வேதனைப்படுத்துவதாகவுள்ளது.

தங்கள் கட்சியிலுள்ள அனைவரும் ஒரே கருத்தினை தெரிவித்து வரும்போது தாங்கள் மட்டும் இவ்வாறான மாறுபட்ட கருத்தினை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெளியிடுவது தங்களின் புளித்துப்போன அரசியல் நடவடிக்கையின் தந்திரமா?என எண்ணத்தோன்றுகின்றது. மீண்டும் தமிழ் மக்களை வேதனைக்குரிய பாதையில் செல்வதற்குவழிகோலிவிடாது செயற்படுமாறு தங்களை இவ் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க விமானத் தாக்குதலில் 14 பொதுமக்கள் பலி; 30பேர் காயம்!

ஈராக் மீது அமெரிக்கப் படைகளால் கடைத்தொகுதிப் பகுதியில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 14 பொதுமக்கள் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.

வடக்கு சாப் மாவட்ட நகரத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டபோதே இச்சம்பவம் இடம் பெற்றது. சன நடமாட்டம் மிக்க நேரத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல் நடத்தப்பட்ட இடத்துக்கு அருகே இராணுவத்தளங்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கோபமடைந்த மக்கள் கொல்லப்பட்டவர்களின் ஆடைத் துண்டுகள் என்பவற்றை அசைத்தவாறு "புஷ் ஒழிக. சதாம் வாழ்க" எனக் கோஷமெழுப்பினர்.

## இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வேலை வாய்ப்பு. தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் நேற்று முதல் கிளிநொச்சி டிப்போ வீதியில் பாரவூர்திகள் சங்கத்திற்கு முன்பாகவுள்ள 30 வீட்டுத்திட்ட வீதிக்குச் செல்லும் வீதிக் கருகாமையில் உள்ள காணியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலமும் மேற்படி திணைக்களம் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் இயங்கி வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

### தமிழீழ...

தோல்வியைப் பெற்றது. சிறிலங்காப்படை கள் சந்தித்த பல தோல்விகளில் மிகவும் மோசமான தோல்வியாக அமைந்தது இத்தாவிலில் அது சந்தித்த தோல்வியாகும்.

இத்தாக்குதல் விடுதலைபுலிகள் இயக்கத்தின் மீது மிகவும் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தியது. 1990ஆம் ஆண்டில் இருந்து ஆனையிறவுத் தளத்தை கைப்பற்றும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருந்தோம். அப்போது 600 படையினர் இப்படை முகாமில் இருந்தனர். பலமுறை இத்தளம் கைமாறி இருந்தது. ஆனால் நாம் இன்று 15.000 படையினரை கொண்டுபரந்து விரிந்திருந்த போதும் பலவகையான நவீன ஆயுதங்கள் சிறப்பு வடிவமைப்புகளைக் கொண்டு காணப்பட்ட போதும் தாக்கி அழித்துள்ளோம். இவ்வெற்றிக்கு எமது போராளிகளின் தியாகம். மக்களின் அற்பணிப்புக்கள் முக்கிய காரணமாக அமைகின்றது. இத்தகைய தாக்குதல்கள் விடுதலைப்புலிகளின் படைச்சமநிலையை உலகிற்கு மிகவும் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது என்றார்.

இதில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் உரையாற்றுகையில்:

இங்கு மீளக்குடியமர்த்துள்ள வடமராட்சி கிழக்கு மக்கள் உண்மையில் இந்த நினைவுக் கல்லை மட்டும் இவர்கள் நிறுவவில்லை. இப்படியான ஒரு வெற்றிக்கு எவ்வாறு பின்புலமாக இருந்தார்கள், எவ்வாறு பங்களிப்புச் செய்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதற்கு நியாயம் இல்லை. உண்மையில் ஆனையிறவை வெற்றிகொள்வதற்கு வெற்றிலைக்கேணியில் இ[illegible] இந்த குடாரப்பிற்கு அனு[illegible] வேண்டிய படைகளைக் கொண்டு வந்து [illegible]ப்பதற்கு முன்பாக வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பெரும்தூரமாக இருந்தது.

குடும்பத்தலைவர்கள் 300பேர் வரை யில் மனைவி, பிள்ளைகள் என்று வெற்றிலைக்கேணி கட்டைக் காட்டை வெற்றி கொள்வதற்கு உறுதுணையாக ஆண். பெண் வேறுபாடின்றி உதவியமை இன்று ஆனையிறவு. கட்டைக்காடு வெற்றிகொள்ள வழிகோலியது.

கடற்புலிகள் தரையிறங்கியதும் சண்டையிட்டதுதான்.மிகுதி உதவிகள் எல்லாம் மக்களே செய்தார்கள். தங்களையும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்காது எல்லைப்படைகளாகவும் கிராமியப் படைகளாகவும் யுத்தக் களத்தில் நின்று களமாடினார்கள்.

ஒருகுடும்பத் தலைவர் தன்னுடைய மனைவியை பிரசவத்திற்காக விட்டுவிட்டு வந்து விட்டார். அவரின் மனைவிக்கு பிரசவம் இடம்பெற்றபோது அவர் ஆனையிறவு வெற்றிக்கு வீரமரணமடைந்தார். இப்படியெல்லாம் நின்று மக்கள் உதவினார்கள்.

1991ஆம் ஆண்டு இதே ஆனையிறவை வெற்றி கொள்வதற்காக 600 பேருடன் இந்த ஆனையிறவு முகாம் இருந்தது. 3000 இற்கு மேற்பட்ட படையணியுடனும் பின்புலமாக மக்களும் இணைந்து அன்று ஆனையிறவை வெற்றி கொள்ள முடியாமைக்கு அரசின் வெற்றிலைக்கேணி தரையிறக்கமே காரணமாக இருந்தது.

அன்று எது தோல்வியாக இருந்ததோ அதே நிகழ்வை 10 ஆண்டுகளின் பின் நாங்கள் நிகழ்த்தி வெற்றியீட்டியுள்ளோம் என்றார்.

எமது போராளிகள் சுமக்க முடியாத பெரும் சுமைகளைத் தாங்கி மனித வலுவிற்கு அப்பால் சென்று செய்த செயற்பாடுகளே இத்தகைய வெற்றியை நாம் பெறுவதற்கு காரணமாக அமைந்தது என மாலதி படையணித் தளபதி கேணல் விதுஷா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: எமது போராளிகளில் பலர் கடல் பயணம் பற்றி எதுவுமே அறியாதவர்கள். அவர்களால் நீண்ட தூரம் கடல் பயணத்தின் பின்னர் ஒரு பெரும் சண்டையை செய்ய முடியாததிருந்தது. ஆனாலும் அவர்கள் மனித வலுவிற்கு அப்பால் சென்று தமது உடல் நலம் பற்றி எதுவும் சிந்திக்காது தமக்கு தரப்பட்ட கடமையை செய்து முடித்தனர். இத்தாக்குதல் களில் லெப். கேணல் சாந்தகுமாரி. லெப். கேணல் ஆனதி ஆகியோரின் பணி மிகவும் முக்கியமானவை.

இத்தாவில் பகுதி மக்களுக்கு நாம் இந்த நேரத்தில் நன்றி கூற வேண்டிய கட்டாயம் உள்ளது. இப்பகுதி மக்கள் எமக்கு உணவு தடைப்பட்டபோது அத்தனை போராளிகளுக்கும் விமானத் தாக்குதல்களின் மத்தியில் உணவு மற்றும் பல்வேறு உதவிகளையும் வழங்கினர். இத்தகைய செயற்பாடுகள் எமக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தந்தன மற்றும் எமது போராட்ட வரலாற்றில் பல்வேறு திருப்புமுனைகள் ஏற்பட்ட போதெல்லாம் எமது மக்கள் எம்முடன் இணைந்திருந்தமையே இத்திருப்பு முனைகளுக்குக் காரணமாகும். எனவே மக்கள் தற்போதைய சமாதான சூழலில் போர் ஓய்ந்ததாக எண்ணி விழிப்பாக இருக்கத் தவறுவோமானால் நாம் பெரும் இழப்புகளை சந்திக்க நேரிடும். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் எல்லைப் படையாக, துணைப்படையாக போர்க்களங்களில் நேரடியாக பங்குபற்றி மக்கள் பல அர்ப்பணிப்புகளைச் செய்தனர். அது போன்று இனியும் எமக்கான எமது நாட்டிற்கான. தனித்துவமான படைப்பலத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் கூறினார்.

### நெல் விலை...

கடந்த 14 வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் பயிர் செய்யப்படவில்லை. படையினர் நெல்லை எடுத்துச் செல்ல அனுமதிக்காதபடியால் நல்லவிலைக்கு விற்க முடியவில்லை என கமக்காரர் சங்கம் முறையீடு செய்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராம மக்களும் பங்குகொண்டனர். இவர்கள் அரசாங்க அதிகாரிகளையும், அலுவலர்களையும் அரச அலுவலகத்திற்குள் செல்லவிடாது மறியல் போராட்டம் செய்தனர்.

### ஆனையிறவு...

கள் திரை நீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இந்த தரையிறக்கத்தின்போது வீரச்சாவடைந்த 13 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது. மேஜர் பரணிதரன் அல்லது பரணின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். மேஜர் கோகிலாவின் திருவுருவப்படத்திற்கு மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். கப்டன் மீனரசனின் திருவுருவப்படத்திற்கு செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

கப்டன் சுடரின் திருவுருவப் படத்திற்கு தளபதி கேணல் கடாபி அவர்களும் கப்டன் அன்புவிழியின் திரு வுருவப்படத்திற்கு மூத்த தளபதி பொட்டு அம்மான் அவர்களும் மேஜர் தென்னவனின் திருவுருவப்படத்திற்கு இம்ரான் பாண்டியன் படையணிச் சிறப்புத்தளபதி மணியரசனும், லெப்டினன்ட் அன்பு வேங்கையின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் றேகாவும், லெப்டினன்ட் அன்பரசியின் திருவுருவப்படத்திற்கு வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனும், 2ஆம் லெப்டினன்ட் சசியின் திருவுருவப்படத்திற்கு குட்டிசிறி பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானுவும், 2ஆம் லெப்டினன்ட் உமாவின் திருவுருவப்படத்திற்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப் புத்தளபதி நகுலனும், கடற்புலி கப்டன் கௌசிகனின் திருவுருவப்படத்திற்கு கேணல் ஜெயமும், கடற்புலி கப்டன் சித்தார்த்தனின் திருவுருவப்படத்திற்கு தளபதி தினேஷ் மாஸ்டரும், கடற்புலி கப்டன் முகுந்தனின் திருவுருவப்படத்திற்கு கண்ணிவெடிப் பிரிவுப் பொறுப்பாளர் அஸ்வினியும் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர். அதனையடுத்து போராளிகளும் பொதுமக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

அடுத்து கூட்டம் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் தி. பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் சிறப்புரைகளை மாலதி படையணியின் தளபதி கேணல் விதுஷா அவர்களும், தளபதி கேணல் பால்ராஜ் அவர்களும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களும் நிகழ்த்தினர்.

அதனையடுத்து வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் கலைநிகழ்வுகள் ஆரம்பமாகின. கலைநிகழ்வுகளின் வரிசையில் விடுதலைப்புலிகளின் படையணிகளின் கலைநிகழ்வுகளும் வடமராட்சி கிழக்கு பாடசாலைகளின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் பெருமளவான மக்களும். போராளிகளும் கலந்துகொண்டனர். (11)

### சீனக்குழு...

படை. கடற்படை அதிகாரிகள் பலரையும் சந்தித்துள்ளனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரதிநிதிகளையும் சீன அதிகாரிகள் சந்தித்துள்ளனர்.


## பயிற்சிநெறி ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையில் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியால் 2003ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு பணியாளர் தராதர பத்திர பயிற்சி நெறியானது 2003.03.28 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு முல்லை பனங்காம் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பயிற்சி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளதால் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து நேர்முக பரீட்சைக்கு சமுகம் கொடுத்தவர்களும், இப்பயிற்சி நெறியில் பயில விரும்புவர்களும் மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்க பணியாளர்களும் அன்றைய தினம் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட கூட்டுறவுச் சபை,**
**முல்லைத்தீவு.**

(சி-2816)



தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில்
தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நடாத்தும்

## கணினி பயிற்சிப் பட்டறை

காலம்: 29-03-2003. 30-03-2003
நேரம்: காலை 08.45 - ந.ப. 12.00
பி.ப. 02.30 - 05.30 வரை.
இடம்: தூயவன் அரசறிவியல் கல்லூரி,
பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.
விடயம்: இணையத் தொழில் நுட்பம்.
மென் பொருள் உருவாக்கம்.

கணினி தொடர்பான கற்கை நெறியை மேற்கொண்டவர்களும், மேற்கொள்பவர்களும், தமிழீழ மாணவர் அமைப்பின் கருத்தமர்வில் பங்கு கொண்டோரும் பங்குபற்றலாம்.

**தமிழீழ மாணவர் அமைப்பு.**

(சி-8037)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.